ஆ. குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, நான் இதை ஆட்சேபணை செய்கிறேன். ஏனென்றால் குதிரைப் பந்தய ஒழிப்புக்கென்று ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டு அந்தச் சட்டம் சுப்ரீம் கோர்ட்டிற்கு எடுத்துச்செல்லப்பட்டு கடந்த 4 ஆண்டுகளாக அப்படியே இருக்கிறது. குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் அமலுக்கு வந்தால் அந்தச் சட்டமே போதுமானது, எக்ஸிகியூடிவ் ஆர்டர் போர்ட்டு நிறைவேற்றிவிட முடியும். இந்தச் சட்டம் தேவையில்லை. ஒரு வேளை சுப்ரீம் கோர்ட் அரசாங்கத்திற்கு சாதகமாக தீர்ப்புச் சொல்லிவிட்டால் இந்தச் சட்டம் தேவையில்லை. அரசாங்கத்திற்கு எதிராகத் தீர்ப்புச் சொன்னாலும் இந்தச் சட்டம் தேவையில்லை. ஆகவே எந்த ரூபத்திலும் இந்தச் சட்டம் தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(5) அறிவிப்பு.

கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவு, 1979

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கேளிக்கை வரி, உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.